# In the Court of District Munsif-cum-Judicial Magistrate Court, Kilpennathur
# DVC 3/2025
## Chief Examination of PW1

| | | |
|---|---|---|
| Name | : | ஷர்மிளா |
| Father Name | : | சரவணன் |
| Husband Name | : | செல்லகுமார் |
| Village | : | வீரப்பாண்டி கிராமம் |
| Taluk | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | 21 |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 on the day of 30.09.2025**

நான் இந்த வழக்கில் மனுதாரர் ஆவேன். நான் எதிர்மனுதாரர் மற்றும் அவரது குடும்பம் ரூ. 5 லட்சம் நஷ்ட ஈடாக தரவேண்டியும், மாதம் ரூ.25 ஆயிரம் ஜீவனாம்சமாக தரவேண்டியும், சீதன நகைகள், பொருட்கள் மற்றும் ரொக்க தொகை ரூ.1 லட்சம் என்னிடம் ஒப்படைக்க வேண்டி இந்த மனுவினை தாக்கல் செய்கிறேன். இந்த மனுவில் உள்ள சங்கதிகள் எனக்கு தெரியும். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். எனது தரப்பு ஆவணமாக 10.04.2024ம் தேதியிட்ட திருவண்ணாமலை சமூக நல துறை அலுவலகத்தில் நான் அளித்த புகார் மனு **மசாஆ**1 ஆகும். 04.12.2022ம் தேதி எனக்கும் எதிர்மனுதாரருக்கும் திருமணம் நடைபெற்றது அதன் திருமண அழைப்பிதழ் தாக்கல் செய்கிறேன் அது **மசாஆ**2 ஆகும். திருமண புகைப்படம் தாக்கல் செய்கிறேன் அது **மசாஆ**3 ஆகும். எனது ஆதார் அட்டை நகல் **மசாஆ**4 ஆகும். 10.04.2024ம் தேதியிட்ட திருவண்ணாமலை சமூக நல துறை அலுவலகத்தில் இருந்து எனக்கும் எதிர்மனுதாரருக்கும் அனுப்பப்பட்ட அசல் கடிதம் **மசாஆ**5 ஆகும். 10.08.2024ம் தேதியிட்ட திருவண்ணாமலை சமூக நல துறை

அலுவலகத்தில் எதிர்மனுதாரர் எழுதி கொடுத்த அசல் **மசாஆ**6 ஆகும். நான் தற்போது குடியிருந்து வரும் வாடகை ஒப்பந்த நகல் தாக்கல் செய்கிறேன் அது **மசாஆ**7 ஆகும். எதிர்மனுதாரர் வசம் இருக்கும் மனுதாரர் சீதன நகைகள் மற்றும் பொருட்கள் அடங்கிய பட்டியல் ரசீது அசல் அது **மசாஆ**8 ஆகும். மனுதாரரின் சொத்து மற்றும் பொறுப்பு ஆகியவைகள் கொண்ட உறுதி பிரமாண பத்திரிக்கை அசல் தாக்கல் செய்கிறேன் அது **மசாஆ**9 ஆகும்.

(மேலும், சில ஆவணங்களை தாக்கல் செய்ய அவகாசம் கோரியதன் பேரில் முதல் விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது. )

திறந்த நீதிமன்றத்தில் சாட்சியின் சாட்சியத்தை சாட்சி சொல்ல நீதிபதி ஆகிய என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு அதனை சாட்சியிடம் படித்து காண்பிக்கப்பட்டு அதை சாட்சி சரி என ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**Sd/– (M.C.ARUN)**
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர்,
கீழ்பென்னாத்தூர்

(எதிர்மனுதாரரின் வழக்கறிஞர் குறுக்குவிசாரணை செய்ய அவகாசாம் கோரியதன் பேரில் குறுக்குவிசாரணை தள்ளிவைக்கப்படுகிறது)